உள்ள மக்களுக்கு எவ்வளவு சதவீதம் பேர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகின்றது? இன்னும் அந்த சதவீதத்தை அதிகப்படுத்தும் நோக்கம் அரசாங்கத்திற்கு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: சிகிச்சை அளிப்பதற்கு டாக்டர்—மக்கள் விகிதாச்சாரத்தைப் பார்க்கின்றபொழுது வேறு மாநிலங்களைவிட நம்முடைய மாநிலத்தில் அது சிறப்பாக அமைந்திருக்கிறது. 4,400 பேர்களுக்கு ஒரு டாக்டர் என்ற வீதத்திலே இப்பொழுது இருக்கிறது. ஆனால் டாக்டர்கள் கிராமங்களுக்குச் சென்று அங்கு சிகிச்சைகள் அளிக்கக்கூடிய முறையில் தேவையான வசதிகள் அரசாங்கத்திற்கும் இல்லை, பொதுமக்களுக்கும் இல்லை, டாக்டர்களுக்கும் இல்லை. அலோபதி முறை, யூனானி போன்ற மருத்துவ முறைகள் கிடைக்கின்ற அளிப்பதைத் தவிர, வேறு சித்த வைத்தியம், ஹோமியோபதி முறை, யூனானி போன்ற மருத்துவ முறைகள் கிடைக்கின்ற வசதிகள் இருக்கின்ற பகுதிகளிலும் சிறந்த பணிகளை அவர்கள் ஆற்றி வருகின்றார்கள். எனவே அலோபதி டாக்டர்களை மட்டும் கணக்கில் எடுத்துக்கொண்டு எவ்வளவு மக்களுக்கு அவர்கள் சிகிச்சை செய்கிறார்கள் என்று பார்ப்பது சரியல்ல.

THIRU K.M. SUBRAMANIAM : Is it not a fact that last year there had been considerable restriction in the admissions even in the existing medical colleges?

THE HON. THIRU K. ANBAZHAGAN : It is not a restriction upon the admission of students to medical colleges in the last year. Because the number of pupils who were admitted earlier is in large proportion that is actually admitted by the Central Medical Council, last year it was brought to limitation.

Operation theatres in Thanjavur Medical College Hospital.

* 128. *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) the date of commencement of the Thanjavur Medical College Hospital;

(*b*) the number of operation-theatres provided in the Hospital;

(*c*) whether all the operation theatres are under use; and

(*d*) if not the reasons thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) 19—11—1965.

(இ) நான்கு இரட்டை அறுவை சிகிச்சை அரங்கங்களும் மூன்று ஒற்றை அறுவை சிகிச்சை அரங்கங்களும் உள்ளன.

(உ) இரண்டு இரட்டை அறுவை சிகிச்சை அரங்கங்களும் மூன்று ஒற்றை அறுவை சிகிச்சை அரங்கங்களும் பயன் படுத்தப்படுகின்றன.

(எ) 1971 ஜூன் மாதம் முதல் 'டெடானஸ்' தோன்றியதால் இரண்டு இரட்டை அறுவை சிகிச்சை அரங்கங்கள் மூடப் பட்டுள்ளன.

DR. H. V. HANDE : May I know whether this Government proposes to increase the number of operation theatres because this is one central hospital for Tanjore, Trichy districts and there is a College also. May I know whether there is any programme with regard to stepping up the number of operation theatres, to increase the facilities, to air-condition certain theatres, etc. May I know the details ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, கல்லூரிகளோடு இணைக்கப்பட்ட மருத்துவமனைகளிலே இன்றைய தினம் மிகுதியான வசதிகள், சாதனங்கள் பொருத்தப் படுகின்றன. தஞ்சையிலே உள்ள ஆப்பரேஷன் தியேட்டர் மருத்துவக் கல்லூரியோடு இணைக்கப்படுவதால் அங்கே வசதிகளைப் பெருக்கவேண்டுமென்று அரசு உணரவில்லை.

Building for Women and Children wing in Chingleput Hospital.

* 129 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of Government to construct a new building for Women and Children's Hospital at Chingleput in the current year; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையைச் சார்ந்த தாய்-சேய் பகுதிக்காக ரூபாய் ஆறு லட்சம் செலவில் ஒரு புதிய கட்டிடத் தைக் கட்டுவதற்கு அரசாங்கம் அனுமதி அளித்திருக்கிறது. இக்கட்டிடம் செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரியைச் சார்ந்த மருத்துவமனையின் வட்டாரத்தில் கட்டப்படும்.

DR. H. V. HANDE : May I know whether it is not a fact that already the hospital attached to the college is not having enough number of patients, to justify its existence. In view of that, is it wise move to have another hospital? May I know whether any concrete steps would be taken to see that instead of crowding in Madras City, many patients could be diverted here so that the existence of extra building might be justified and more patients treated here?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, தாய்-சேய் நல மருத்துவமனை என்பது எங்கே ஏற்பட்டாலும் கூட்டம் பொதுவாகவே குறைவாக இருக்காது. வேறுவிதமான சிறப்பு நல மருத்துவமனைகளிலே கூட்டம் குறைவாக இருக்கலாமே தவிர, இவற்றில் இருக்காது, காரணம் இவற்றில்